# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

## கட்டடவாக்கம்

**2024 யூன்**

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**கட்டடவாக்கத்திற்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் (கொ.மு.சு - கட்டடவாக்கம்), 2024 யூனில் 59.5 சுட்டெண் பெறுமதியினை அடைந்து, மூன்றாவது தொடர்ச்சியான அளவீட்டுச் சுற்றுக்களில் அதன் அதிகூடிய சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** தொழிற்துறையானது பல்தரப்பு முகவராண்மைகள் மூலம் நிதியளிக்கப்பட்ட குறிப்பாக, வீதிப் புனரமைப்பு மற்றும் நீர் விநியோகத்துடன் தொடர்புபட்ட கருத்திட்டங்கள் மூலம் பிரதானமாக தூண்டப்பட்டிருந்ததென அநேகமான பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டினர்.

புதிய கட்டளைகள் யூனில் உயர்வான வீதத்தில் அதிகரித்து, எதிர்கால தொழிற்துறைச் செயற்பாட்டிற்காக சாதகமான எதிர்பார்க்கையினை எடுத்துக்காட்டியது. எனினும், மாதகாலப்பகுதியில் தொழில்நிலை முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மெதுவான வீதமாயினும் சுருக்கமடைந்தே காணப்பட்டது. அதேவேளை, உள்ளீட்டுப் பொருட்களுக்கான கேள்வியில் அதிகரிப்புடன் கொள்வனவுகளின் அளவு அதிகரித்தது. மேலும், கட்டடவாக்கப் பொருட்களின் அநேகமானவற்றின் விலைமட்டங்கள் வீழ்ச்சியடைந்த போக்கில் காணப்படுகின்றதென பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். அதேவேளை நிரம்பலர் விநியோக நேரம் யூனில் மேலும் நீட்ச்சியடைந்தது.

**கொமு சுட்டெண் தொகுப்பு - கட்டடவாக்க அளவீடு**

| மாறி | மே | யூன் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – கட்டடவாக்கம் (மொத்த நடவடிக்கைச் சுட்டெண்)** | **54.5** | **59.5** | **+** | **அதிகரிகின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 51.5 | 60.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 39.4 | 40.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 50.0 | 58.1 | + | நடுநிலையிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 51.5 | 54.1 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கிடைக்கப்பெறுகின்ற கருத்திட்டங்களின் படிப்படியான அதிகரிப்பின் காரணமாக வரவிருக்கும் மூன்று மாதங்களுக்கான கட்டடவாக்க நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்படுகின்றன. எனினும், எதிர்வரும் தேர்தல் காலப்பகுதியுடன் இணைந்த சாத்தியமான நிச்சமின்மை பற்றி பல நிறுவனங்கள் எச்சரிக்கையாகவுள்ளன.

**கொமுசு**
**கட்டடவாக்கம்**
**மொத்த நடவடிக்கைச் சுட்டெண்**
**2024 யூன்**
**59.5**

**கட்டடவாக்க கொ.மு.சு மொத்த நடவடிக்கைச் சுட்டெண்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு கட்டடவாக்கத் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| யூரோ வலயம் | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| பிரான்ஸ் | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| ஜேர்மனி | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| அயர்லாந்து | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| இத்தாலி | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 யூலை 30 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

சுட்டெண் தொகுப்பும் சுட்டெண்கள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண் என்பது பன்னாட்டு சிறந்த நடத்தைகளின் பிரகாரம் **கொமுசு – கட்டடவாக்கம்** என குறிப்பீடு செய்யப்படுகின்ற கட்டடவாக்கத்திற்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதத்திற்கு மாத அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுப்பாளர்களை உள்ளடக்கி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த அதிகூடிய தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்கக் கம்பனிகளை இலக்காகக் கொண்டு அளவீடு நடாத்தப்படுகின்றது.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் அளவு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.